கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.148/2011** தேதி:**05.08.2025**

வாதி தரப்பு சாட்சி -1 (தேவகி, த/பெ.அன்னப்பன்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) நான் என்ன படித்து உள்ளேன் என்றால் MA.B.Ed படித்துள்ளேன். நான் இந்து சமயஅறநிலையத்துறையில் Executive officer ஆக ஓர் ஆண்டு பணியாற்றிவருகிறேன். எனக்கு ஆங்கிலம் மற்றும் தமிழ் சரளமாக எழுதபடிக்க தெரியும் என்றால் சரிதான். வழக்கு பற்றின விவரங்களை கோப்பின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்க வந்துளளேன் என்றால் சரிதான்.
2) வாதி விளம்புகை மற்றும் உறுத்துகட்டளை பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.
3) வழக்கு சொத்தின் சர்வே எண் சரியாக தெரியவில்லை ஆனால் 2 1/2 ஏக்கர் நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டடுள்ளது.
4) கோயில் என்பது சரவண விநாயகர் மற்றும் செல்வமுத்து மாரியம்மன் கோயில் ஆகும். அந்த கோயில்களுக்கு என்ன சர்வே எண் பாத்தியம் என்றால் ஆவணத்தை பார்த்தால் கூற முடியும்.

PHEBE B

Digitally signed by PHEBE B
Date: 2025.08.05 16:43:38 +0530

5) வாதி சங்கர் வழக்கு தாக்கல் செய்துள்ள சர்வே எண் 2669/4 என்றால் சரிதான். அவர் கோரியுள்ள விஸ்தீரனம் 1300 சதுரஅடி என்றால் சரிதான். சர்வே எண் 2669/4 என்பது கோயிலுக்கு பாத்தியமானதாக இருந்தால் மட்டுமே அதன் மீது உரிமை கோரமுடியும் என்றால் சரிதான். வழக்கு சொத்தை பொருத்தமட்டில் நான் எதிர் கோர் உரிமை கோரவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் கேட்டுள்ளோம். ( ஆனால் எதிர் கோர் உரிமை கோரவில்லை)

6) என்னிடம் காண்பிக்கப்படும் பி.த.சா.ஆ.1 ல் சர்வே எண் 2669/4 ன் உள்ளதா என்றால் இல்லை. பழைய சர்வே எண் வேறு அதனை ஆவணத்தை பார்த்தால் என்னால் கூற முடியும்.

7) சரவணவிநாயகர் கோயில் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதில் பிள்ளையார் கோயில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

8) பி.த.சா.ஆ.5 ல் பக்கம் 5ல் கடைசி 2 வரியில் *“we find that T.S.No.2669/4 which is an extensive survey number is shown as Government property”* என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9) தாவா சொத்து சர்வே எண் 2669/4 ஆனது அரசாங்க புறம்போக்கு நிலம் என்றாலும் அது கோயில் சொத்து இல்லை என்றாலும் சரிதான். ஆனால் அது கோயில் புறம்போக்கு நிலமாக சேரும்.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது .

PHEBE B

Digitally signed by PHEBE B
Date: 2025.08.05 16:43:46 +0530